# பாடநெறி வழிகாட்டி

## மாகாண கல்வி நிலையம்

# 2025




**கொழும்பு இறையியல் கல்லூரி**

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி 2025

## மாகாண கல்வி நிலையம்

இலங்கையிலும், அதற்கு அப்பாலும் திருச்சபை மற்றும் சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களிலும் விசுவாசிகளை திருச்சபைகளில் கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களாக தயார்படுத்துவதற்காக இறையியல் கல்வியை வழங்குவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியானது தன்னை அர்ப்பணித்துள்ளது.

கொழும்பு இறையியல் கல்லூரி என்பது, பல்தரப்பட்ட கிறிஸ்தவ பிரிவுகளை சேர்ந்த விசுவாசிகளின் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தவும், அவர்களது செழுமையான கிறிஸ்தவ மரபுகளை உணர்ந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருகிற இறையியல் கல்லூரியாகும்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் அர்ப்பணிப்பானது பரிசுத்த வேதாகம அதிகாரத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது: அது வேதாகமமே எமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான இறுதியான வழிகாட்டி என்பதாகும்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் துடிப்பான கற்போர் சமூகத்துடன் இணைந்து கொண்டு விறுவிறுப்பான கற்றலின் பயணத்திலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் சுவிசேஷப்பணிக்கான பயன் தரக்கூடிய திறன்களை வளர்த்துக்கொள்வதிலும் பங்கெடுத்துக்கொள்ளுங்கள்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தில் இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமை கொண்டது.**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரம் கொண்டது.**

# தொடர்புகொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **மாகாண கல்வி பாடநெறிகள்** | extensions@cts.lk |
| **யாழ்ப்பாணம்** | +94 77 9177211<br>jaffna@cts.lk |
| **வவுனியா** | +94 76 9466882 |
| **மட்டக்களப்பு** | +94 76 6258273 |
| **இரத்தினபுரி** | +94 76 6368869 |
| **மாகாண கல்வி முகாமையாளர்**<br>இ. ஹரிஹரன் | haran@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>போதகர் ரவின் கல்தேரா | ravin@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பொதுவான தகவல்கள் | 4 |
| நேர அட்டவணை | 6 - 11 |
| பாடநெறி விவரணம் | 12 - 22 |
| விரிவுரையாளர் விபரங்கள் | 23 - 28 |
| CTS பாடத்திட்டங்கள் | 29 |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

■ பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களில் ஒரு பாடநெறியானது 4 நாட்களை கொண்டதாக மாதத்திற்கு ஒரு தடவை நடைபெறும்.

* யாழ்ப்பாண நிலையத்தில் மாத்திரம் மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று பாடங்கள் நடைபெறும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

■ பாடங்கள் CTS மாகாண கல்வி நிலையங்களில் நடைபெறும்.

**பாடக்கட்டணம்:**

ஒரு பாடத்திற்கு ரூபா 3000/= ஜனவரி முதல் அறவிடப்படும்.

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**பாடநெறிக்கு பதிவு செய்யும் முறை:**

முன்பக்கத்தில் உள்ள CTS மாகாண கல்வி நிலையங்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களை தொடர்பு கொள்வதற்கூடாக பாடத்திற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

# நேர அட்டவணை
# 2025

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| ஜனவரி - பெப்ரவரி | **திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்**<br>ஜனவரி 7-10<br>சிவராஜசிங்கம் ஜெயராஜ்<br><br>**திருச்சபை மாதிரிகள்**<br>ஜனவரி 20-24<br>நெப்போலியன் பத்மநாதன்<br><br>**பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>ஜனவரி 28-31<br>வனஜா ராஜ்குமார் | **தலைமைத்துவம்**<br>ஜனவரி 20-24<br>யோகநாதன் பகீரதன் | **இலங்கை திருச்சபை வரலாறு**<br>ஜனவரி 28-31<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **கிறிஸ்தவ உக்கிராணத்துவம்**<br>ஜனவரி 28-31<br>கிறிஸ்துமணி செல்லையா |
| | **கற்கை முறைகள்**<br>பெப்ரவரி 3-7<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br><br>**பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்**<br>பெப்ரவரி 10-14<br>ஜுலியன் தேவதாசன்<br><br>**எஸ்றா - நெகேமியா**<br>பெப்ரவரி 18-21<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | **கற்கை முறைகள்**<br>பெப்ரவரி 10-14<br>ம. தர்ஷன் | **கற்கை முறைகள்**<br>பெப்ரவரி 18-21<br>வனஜா ராஜ்குமார் | **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>பெப்ரவரி 18-21<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| மார்ச் - ஏப்ரல் | **கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு**<br>மார்ச் 4-7<br>தனராஜ் அஜேந்திரன்<br><br>**திருப்பணிக்கான அறநெறி**<br>மார்ச் 18-21<br>இரா. ஹரிஹரன்<br><br>**சீஷத்துவம்**<br>மார்ச் 25-28<br>ப. காந்தன் | **கிறிஸ்தவ உக்கிராணத்துவம்**<br>மார்ச் 18-21<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் | **இறையியலுக்கான அறிமுகம்**<br>மார்ச் 25-28<br>யொஹான் கிருஷ்ணகுமார் | **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மார்ச் 25-28<br>வனஜா ராஜ்குமார் |
| | **கிறிஸ்தவ வரலாறு I**<br>ஏப்ரல் 1-4<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br><br>**திருச்சபையியலும் இறுதியியலும்**<br>ஏப்ரல் 8-11<br>கிறிஸ்துமணி செல்லையா<br><br>**கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு**<br>ஏப்ரல் 22-25<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | **சிறிய தீர்க்கதரிசிகள்**<br>ஏப்ரல் 8-11<br>ம. தர்ஷன் | **சிறுவர் ஊழியம்**<br>ஏப்ரல் 22-25<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் | **இறையியலுக்கான அறிமுகம்**<br>ஏப்ரல் 22-25<br>இரா. ஹரிஹரன் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| மே - ஜூன் | **வேதாகம விளக்கவுரை**<br>மே 5-9<br>இரா. ஹரிஹரன்<br><br>**திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்**<br>மே 20-23<br>ஜேசன் செல்வராஜா<br><br>**துன்புறுத்தலின் இறையியல்**<br>மே 27-30<br>சரத் டீ சில்வா<br><br>**கிறிஸ்தவ வரலாறு II**<br>ஜூன் 17-20<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br><br>**நீதிமொழிகள்**<br>ஜூன் 24-27<br>யொஹான் கிருஷ்ணகுமார் | **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>மே 27-30<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர்<br><br>**உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்**<br>ஜூன் 24-27<br>சூசைப்பிள்ளை பிரின்ஸ் டைனீசியஸ் | **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்**<br>மே 20-23<br>ப. காந்தன்<br><br>**ஏசாயா**<br>ஜூன் 17-20<br>காமினி ஜயந்த | **புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மே 27-30<br>யொஹான் கிருஷ்ணகுமார்<br><br>**திருத்தூதுப் பணிக்கான அறிமுகம்**<br>ஜூன் 24-27<br>சிவராஜசிங்கம் ஜெயராஜ் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| ஜூலை - ஆகஸ்ட் | **நியாயாதிபதிகள்**<br>ஜூலை 1-4<br>சிவராஜசிங்கம் ஜெயராஜ் | **கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்**<br>ஜூலை 22-25<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **திருச்சபையியலும் இறுதியியலும்**<br>ஜூலை 22-25<br>கிறிஸ்துமணி செல்லையா | **தேவனும் உலகமும்**<br>ஜூலை 22-25<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன் |
| | **வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்**<br>ஜூலை 22-25<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | | | |
| | **ஆதியாகமம்**<br>ஆகஸ்ட் 12-15<br>பாலசிங்கம் றொபேட் | **சீஷர்களை உருவாக்குதல்**<br>ஆகஸ்ட் 26-29<br>சூசைப்பிள்ளை பிரின்ஸ் டைனீசியஸ் | **வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்**<br>ஆகஸ்ட் 19-22<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்**<br>ஆகஸ்ட் 26-29<br>வனஜா ராஜ்குமார் |
| | **தலைமைத்துவம்**<br>ஆகஸ்ட் 19-22<br>யோகநாதன் பகீரதன் | | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| செப்டெம்பர் -அக்டோபர் | **உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்**<br>செப்டெம்பர் 9-12<br>சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ்<br><br>**இறையியலுக்கான அறிமுகம்**<br>செப்டெம்பர் 16-19<br>இரா. ஹரிஹரன்<br><br>**அப்போஸ்தலருடைய நடபடிகள்**<br>செப்டெம்பர் 23-26<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன்<br><br>**தேவனும் உலகமும்**<br>செப்டெம்பர் 30 - அக்டோபர் 1-3<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன்<br><br>**திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள்**<br>அக்டோபர் 7-10<br>கிறிஸ்டி சாமுவேல் | **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>செப்டெம்பர் 23-26<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர்<br><br>**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>அக்டோபர் 14-17<br>கிறிஸ்துமணி செல்லையா | **திருச்சபையில் கற்பித்தல் பணியைக் கட்டியெழுப்புதல்**<br>செப்டெம்பர் 16-19<br>தனராஜ் அஜேந்திரன்<br><br>**இலங்கை திருச்சபை வரலாறு**<br>அக்டோபர் 7-10<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | **துர்உபதேசங்கள்**<br>செப்டெம்பர் 26-23<br>காமினி ஜயந்த<br><br>**சுதேசிய கிறிஸ்தவன்**<br>அக்டோபர் 14-17<br>கிறிஸ்டி சாமுவேல் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | இரத்தினபுரி |
|---|---|---|---|---|
| நவம்பர் - டிசம்பர் | **சுதேசிய கிறிஸ்தவன்**<br>நவம்பர் 11-14<br>கிறிஸ்டி சாமுவேல் | **தேவனும் சமூகமும்**<br>நவம்பர் 25-28<br>கிறிஸ்டி சாமுவேல் | **சுதேசிய கிறிஸ்தவன்**<br>நவம்பர் 18-21<br>கிறிஸ்டி சாமுவேல் | **துன்புறுத்தலின் இறையியல்**<br>நவம்பர் 25-28<br>சரத் டீ சில்வா |
| | **சீஷர்களை உருவாக்குதல்**<br>நவம்பர் 18-21<br>பா. சுதாஸ் | | | |
| | **பிரதான இறையியலாளர்கள்**<br>நவம்பர் 25-28<br>தனராஜ் அஜேந்திரன் | | | |
| | **கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்**<br>டிசம்பர் 2-5<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **திருச்சபையியலும் இறுதியியலும்**<br>டிசம்பர் 2-5<br>கிறிஸ்துமணி செல்லையா | **வழிபாடு பற்றிய இறையியல்**<br>டிசம்பர் 2-5<br>இரா. ஹரிஹரன் | **எபேசியருக்கு எழுதிய நிருபம்**<br>டிசம்பர் 2-5<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடத்திற்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# பாடநெறி விவரணம்

## திருத்தூதுப்பணிக்கான அறிமுகம் — திறமை அளவு: 2

“திருத்தூதுப்பணி” எனும் வார்த்தையை அனைத்து கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தாலும், அதை குறித்த சரியான தெளிவின்மை இன்றும் காணப்படுகிறது. இப்பாடமானது திருத்தூதுப்பணி என்றால் என்ன என்பதை வரலாற்று ரீதியாக பல கோணங்களில் ஆராய்ந்து, ஏற்படும் சவால்கள் மத்தியில் தேவனின் திருத்தூதுப் பணியினை முன்னெடுப்பதற்கு நீங்களும், உங்கள் திருச்சபையும் தனித்துமான பங்களிப்பினை வழங்குவதற்கு தயார்படுத்துகிறது.

## பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம் — திறமை அளவு: 2

இப்பாடமானது பழைய ஏற்பாடின் ஒவ்வொரு புத்தகத்தினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழ்ந்த வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பல வகைப்பட்ட புத்தகங்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடமானது உதவியாக அமையும்.

## கற்கை முறைகள் — திறமை அளவு: 0 (2)

இறையியல் கல்வியின் உயர் பெறுமதியை கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வி சார்ந்த அடிப்படை பண்புகளை கண்டறிவதற்கூடாக அறியுங்கள். இப்பாடமானது கொழும்பு இறையியல் கல்லூரியின் கற்கைநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், ஒப்படை மற்றும் கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

## ஆதியாகமம் — திறமை அளவு: 2

ஆரம்பங்களின் புத்தகத்தை குறித்து ஆழமாக ஆராயப்படும். இப்பாடமானது உலகத்தின் ஆரம்பம், மனிதன், இஸ்ரவேல், பாவம், மீட்பு உள்ளிட்ட கருப்பொருள்களுடன் ஆதியாகமத்தின் சரித்திர, கலாச்சார பின்னணியில் அதன் விளக்கத்தையும், அதன் அமைப்பு, செய்தி ஆகியவற்றையும் ஆராயும்.

## எஸ்றா - நெகேமியா
திறமை அளவு: 2

பழைய ஏற்பாட்டில் சிறையிருப்பின் காலத்துக்கு பின்னைய சரித்திரத்தை குறித்து பேசும் இரண்டு நூல்கள் இவை மட்டுமே. இவ்விருவரும் இஸ்ரவேல் சமூகத்தின் சமய சமூக அரசியல் நிலைகளை கட்டியெழுப்ப சமகாலத்தில் பணியாற்றியவர்கள். தங்களை சூழவுள்ள உலகிலிருந்து வேறு பிரிந்து மீண்டும் எவ்விதம் தங்களை சமய ரீதியில் பலப்படுத்தலாம் என்பதை இவர்கள் இஸ்ரவேலுக்கு கற்பித்தார்கள். இயேசுவின் காலத்தில் அறியப்பட்ட யூத மதத்தின் தோற்றத்துக்கான சீர்திருத்தத்தின் அடிப்படையை வித்திட்டவர்கள் இவர்களே.

## கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு
திறமை அளவு: 2

கிறிஸ்தவம் என்பது வாழ்க்கை முறையுடன் தொடர்புற்ற கோட்பாடெனப்படுவதுடன், இது வரலாற்று சம்பவங்களின் அடிப்படையிலான இறையியல் வினாக்களின் மூலமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து மூலம் கிடைக்கப்பெற்ற விடுதலையை பெறுவதற்கான முயற்சியானது வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டது. எனவே கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் கிறிஸ்தவ சிந்தனை மற்றும் பக்தி வளர்ச்சியை நமது வாழ்க்கையின் நியாயப்பிரமாணங்களில் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடத்தின் மூலமாக கிறிஸ்தவ வரலாற்றினூடாக கிறிஸ்தவத்தின் முக்கிய கோட்பாடுகளின் உருவாக்கம் பற்றி கற்றுக்கொள்வீர்கள்.

## சீஷத்துவம்
திறமை அளவு: 2

### 21-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் வழியை பின்பற்றுவது எப்படி?

சீஷன் என்பவன் யார்? அவனுடைய குணாதிசயங்கள், அவன் எதிர்கொள்ளும் சவால்கள், ஆவிக்குரிய போராட்டங்கள், அவற்றை மேற்கொள்ளும் முறைகள் போன்ற விடயங்களை இப்பாடத்தில் ஆராய்வதுடன், கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு சீஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகின்ற முக்கிய காரணிகளை குறித்தும் ஆராயப்படும்.

## திருச்சபையியலும் இறுதியியலும்
திறமை அளவு: 2

சபையாக இருத்தல் என்பதை நாம் எவ்வாறு விளங்கி கொள்கின்றோம்? அது பாரம்பரியங்களா அல்லது கட்டிடங்களா அல்லது வழிபாட்டு முறைகளா? நாம் அறிந்திருக்கும் உலகம் எவ்வாறு முடிவடையும்? சபையியலும், இறுதியியலும் சபையை குறித்தும், இறுதி காலத்தை குறித்தும் சபையின் முக்கிய போதனைகளை ஆராயும் ஒரு பாடமாகும். இப்பாடமானது உங்களுக்கு உங்கள் சபையுடன் இருக்கும் ஐக்கியத்தை ஆழமாக்கி ஒன்றாக இயங்க தூண்டுவது மட்டுமல்லாது வரவிருக்கும் விடயங்களை குறித்தும் விளங்கிக்கொள்ளவும் உதவும் முக்கியமான பாடமாகும். இப்பாடத்தினை தவற விடாது கட்டாயமாக கற்றுக்கொள்வது நன்று.

## கிறிஸ்தவ வரலாறு I
**(கி.பி. 100 - கி.பி. 1517)**

திறமை அளவு: 2

கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்பம் முதல் சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இப்பாடமானது கி.பி.1 முதல் கி.பி.1400 வருடங்களில் திருச்சபையானது விரிவடைந்த விதங்கள், அதை வடிவமைத்த இறையியல்கள், திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

## கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு

திறமை அளவு: 2

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து" நீதி 22:6. கிறிஸ்தவ குடும்பங்களிலுள்ள பெற்றோர் வேகமாக மாறும் இவ்வுலகத்திலே தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தை குறித்தும், ஆரோக்கியமான குடும்பத்தை கட்டியெழுப்புவதை குறித்தும் பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே இப்பாடமானது வேதாகமத்தின் அடிப்படையில் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டுமென்பதை குறித்தே கற்றுக்கொடுக்கின்றது. பெற்றோர்களின் அன்பானது பிள்ளைகளின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியின்போதும் போஷாக்கு, பாதுகாப்பு, ஒழுக்கநெறி மற்றும் அறிவுரைகள் போன்ற விடயங்களால் வெளிப்படுத்தப்பட வேண்டும். உங்களை சிறந்த பெற்றோராக மாற்றவும் ஏனைய பெற்றோர்களை வழிநடத்தவும் இப்பாடமானது உதவி புரியும்.

## வேதாகம விளக்கவுரை

திறமை அளவு: 2

ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் வார்த்தையே வேதாகமம் என கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். ஆகவே நாம் சத்திய வசனத்தை சரியான வகையிலே கையாள வேண்டும் என்பது பாரியதொரு சவாலாகும். வேதாகம விளக்கவுரையானது வேதாகமத்தில் உள்ள வித்தியாசமான மொழி நடைகளை, அதாவது கவிதை, தீர்க்கதரிசனம், கதை, சட்டம் ஆகியவற்றை விளக்குவதற்கான கோட்பாடுகளை மாணவர்களிற்கு கற்றுத்தரும்.

## திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்

திறமை அளவு: 2

நீங்கள் திருச்சபையில் ஓய்வுநாள் பாடசாலை, வாலிபர் குழுக்கள், வேதாகப்படிப்பு குழுக்கள் போன்ற கற்பித்தல் ஊழியங்களில் ஈடுபட்டிருப்பீர்கள் என்றால் நீங்களும் கிறிஸ்தவ கல்வியோடு தொடர்புடையவர்களே. இந்த பாடமானது கற்பித்தல் பணியை குறித்து வேதாகமம் கூறுவதை கற்றுத்தருகின்றது. அத்துடன் உங்கள் இலக்குக்குழுவை மனதில்கொண்டு பயிற்சி நிகழ்சிகளை வடிவமைத்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்க உதவி செய்வதோடு, வாழ்க்கையையும் புதுப்பித்துக்கொள்ள உதவி செய்யும்.

## துன்புறுத்தலின் இறையியல்

திறமை அளவு: 2

இருபதாம் நூற்றாண்டானது, அதற்கு முன்னைய அனைத்து நூற்றாண்டுகளையும் விட அதிகமாக இரத்த சாட்சிகளை கண்டது. "நீதியின் நிமித்தமான துன்பப்படுதல்" குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது?, திருச்சபை ஏன் துன்புறுத்தப்படுகிறது மற்றும் அத்துன்புறுத்தலுக்கு எவ்வாறு மாறுத்தரம் அளிக்க வேண்டும்? போன்றவற்றிற்கான பதில்களை இப்பாடமானது வேதாகம ரீதியாக ஆராய்வதுடன், உலகத்தில் உள்ள திருச்சபைகளில், சில வரலாற்று மற்றும் தற்போதைய துன்புறுத்தல் சூழ்நிலைகளை ஆராய்ந்து உரிய வகையில் மாறுத்தரம் அளிக்கத்தக்க விதமாக விசுவாசிகளை தயார்படுத்துகிறது.

## கிறிஸ்தவ வரலாறு II
### (கி.பி. 1517 - கி.பி. 1900)

திறமை அளவு: 2

சீர்திருத்தம் முதல் (1517) நவீன திருத்தூதுப்பணி இயக்கங்கள் (1900) வரையிலான காலகட்டத்தில் மேற்கத்தேய திருச்சபை வரலாற்றின் மாபெரும் சீர்திருத்தவாதிகள், மதிநுட்பமுள்ள இறையியலாளர்கள், பெருங்கூட்ட சுவிசேஷகர்கள், உலக தூதுப்பணி இயக்கங்கள் ஆகியவர்களால் திருச்சபையில் ஏற்பட்ட பரம்பல், தாக்கங்களை இப்பாடமானது ஆராய்வதோடு, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய முக்கிய பாடங்களை, ஆரோக்கியமான சபை வாழ்வை நோக்கி பிரயோகிப்பதற்கும் உதவி செய்யும்.

## நீதிமொழிகள்

திறமை அளவு: 2

புராதன இஸ்ரவேலரின் பெறுமதி வாய்ந்த ஞான பாரம்பரியத்தை வேதாகம நூல்களான யோபு, பிரசங்கி மற்றும் நீதிமொழிகள் நூல்கள் எமக்காக பாதுகாத்து வைத்துள்ளன. முழு நூலினதும் பின்னணியை ஆழமாக புரிந்து கொண்டு வாசிக்கும்போது, நீதிமொழிகளின் பெறுமதியை உணரவும், அவற்றை வாழ்வில் பிரயோகிக்கவும் கூடுமானதாயிருக்கும். இஸ்ரவேலின் ஞானத்தில் நீங்களும் மூழ்கி, இன்று ஞானமுள்ள வாழ்வை வாழ்வதற்கு நீதிமொழிகளின் அவசியத்தை வந்து கற்றுக்கொள்ளுங்கள்.

## வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்

திறமை அளவு: 2

இப்பாடம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு மிகவும் அவசியமானது. ஏனென்றால் இன்று வேதாகமத்தை குறித்தும், அதன் நம்பகத்தன்மை குறித்தும் அதிகமான சந்தேகங்களும், சர்ச்சைகளும் தோன்றியுள்ளன. இதை குறித்து பலவிதமான கண்ணோட்டங்களும் உள்ளன. இவைகளை குறிப்பாக கற்றறிவதன் மூலம் நாம் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை குறித்து எமது விசுவாசத்தை இன்னும் பலப்படுத்தி கொள்வதோடு, வேதாகமத்தின் நம்பகத்தன்மையை மற்றவர்களுக்கு உறுதியுடன் எடுத்துக்காட்டவும் முடியும்.

## தலைமைத்துவம் 
திறமை அளவு: 2

இன்றைய சமூகம் தலைமைத்துவம் குறித்த சிந்தனைகளால் நிறைந்திருக்கின்றது. வேதாகம ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைமைத்துவ கோட்பாடுகள் எவை என்பதை ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு இனங்காண முடியும்? என்பதையும், உங்களுடைய ஊழியம், வேலைத்தளம், வீடு போன்ற சூழ்நிலைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவனாக சிறந்து விளங்க முடியும் என்பதையும் கற்றுக்கொள்ளவும் இப்பாடமானது வாய்ப்பளிக்கின்றது.

## உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
திறமை அளவு: 2

ஏற்கனவே நமக்குள் ஒரு தலைமைத்துவம் ஒளிந்திருக்கிறது. அதனை நம்மில் அநேகர் அறியாமல் இருக்கிறோம். சிலர் தலைவர்களாக பிறந்திருக்கிறார்கள், சிலர் தலைவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள், சிலர் தலைமைத்துவத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள். இதில் நீங்கள் எந்த சாரராயிருப்பினும் உங்களை தலைவராக எண்ணினால் உங்களுக்கு தேவையான முக்கிய பாடம் இதுவாகும். இது தலைமைத்துவம் என்றால் என்ன?, அதன் திறவுகோல், உள்ளடக்கம், சவால், உயர்வு, முரண்பாடுகளை கையாளுதல், பண்புகள், தரிசனம், தூரநோக்கு, ஒழுக்கம், மேம்பாடு என்பவற்றை ஆராய்ந்து உங்களுக்குள் புதைந்திருக்கும் தலைமைத்துவத்துக்கு புத்துயிரளிக்கும்!

## இறையியலுக்கான அறிமுகம்
### கிறிஸ்தவ அடிப்படை விசுவாச கோட்பாடுகள்
திறமை அளவு: 2

எங்கள் விசுவாசமே எங்கள் வாழ்க்கையை தீர்மானிக்கும்! நாம் எதனை விசுவாசிக்கிறோம் என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருந்தாலும், அநேகர் அதனை தெளிவாக அறியாதிருக்கின்றார்கள். நீங்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளை மற்றொருவருக்கு விளக்க ஆரம்பித்து இறுதியில் தடுமாறும் நிலைக்கு ஆளாகியிருக்கிறீர்களா? இப்பாடம் கிறிஸ்தவ கோட்பாடுகளை குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை உங்களுக்கு தருவதோடு மற்றவர்களுக்கு அதனை நம்பிக்கையுடன் விளக்கவும் உதவி செய்யும்.

## அப்போஸ்தலருடைய நடபடிகள்
திறமை அளவு: 2

பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என அழைக்கப்படும் இது ஆதி திருச்சபையின் அநேக வருட வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கிய புதிய ஏற்பாடின் பொக்கிஷமான புத்தகமாகும். “கிறிஸ்தவர்கள்” எனும் அடையாளம், திருச்சபை சங்கம், அப்போஸ்தலரின் செயற்பாடுகள், திருத்தூதுப்பணியின் பரம்பல் உள்ளிட்ட அநேகவற்றின் ஆரம்பங்களை தன்னகத்தே கொண்டுள்ள இப்புத்தமானது இன்றைய திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அவசியமான பல விடயங்களை ஆராய்கிறது.

## தேவனும் உலகமும் — திறமை அளவு: 2

இப்பாடமானது சமகால வாதங்கள், கிறிஸ்தவ சிந்தனையின் வரலாறு ஆகியவற்றை கிறிஸ்தவ அடிப்படையின் வெளிச்சத்தில் ஆராய்கிறதுடன் முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆய்விற்கான அறிமுகமாகவும் காணப்படுகிறது. ஆண்டவருடைய குணாதிசயங்களும் அவருடைய தன்மைகளும், உலகம், மனிதனின் படைப்பு மற்றும் வீழ்ச்சி ஆகிய முக்கிய கருப்பொருள்களை வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும்.

## திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள் — திறமை அளவு: 2

திருத்தூதுப்பணி என்பது வேதாகமம் முழுவதும் பரந்து காணப்படும் ஒரு தலைப்பாகும். இவ்வுலகை குறித்த கடவுளின் நோக்கம் ஆதியாகமம் 1-ம் அதிகாரத்திலும், மீட்பை குறித்த திட்டம் 3-ம் அதிகாரத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருத்தூதுப்பணியின் கருப்பொருளுக்கான தேடலில் ஆபிரகாமின் அழைப்பு, இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட திருத்தூதுப்பணிக்கான ஆணை, இயேசுவும் தூதுப்பணியும், அப்போஸ்தலர் நடபடிகளில் தூதுப்பணி போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## சீஷர்களை உருவாக்குதல் — திறமை அளவு: 2

கிறிஸ்து விசுவாசிகளையல்ல, சீஷர்களையே உருவாக்கும்படி கட்டளையிட்டார். கிறிஸ்துவின் மாபெரும் கட்டளையை நிறைவேற்ற விரும்பும் ஒவ்வொருக்கும் உதவக்கூடிய இப்பாடத்தில் சுவிசேஷத்தை ஒருவர் ஏற்றுக்கொள்ளும்போது செய்யப்பட வேண்டிய பின்தொடர்பணிகள் எவை? அவற்றை எவ்வாறு செய்ய வேண்டும்? கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒருவர் கிறிஸ்துவை பின்பற்றுபவராக, பிரதிபலிப்பவராக மாற எவ்வாறு உதவி செய்ய முடியுமென ஆராயப்படும்.

## பிரதான இறையியலாளர்கள் — திறமை அளவு: 2

நாம் நீண்டகால வலிமையான பாரம்பரிய கிறிஸ்தவ சிந்தனையாளர்களின் வழித்தோன்றலையுடையவர்கள். இவர்களின் சிந்தனை எமது வேதாகமத்தை விளக்கும் முறையை, வேதாகம கோட்பாடுகளை, பாடல் தொகுப்பை, ஜெபிக்கும் முறையை, உலகில் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் பண்புகளை அபிவிருத்தி செய்திருக்கிறது. அவர்களது காலத்தின் இறையியல் சம்பாஷணை, வாழ்வு, போராட்டம், பங்களிப்பு என்பவற்றை அறிவது நாம் பெற்றிருக்கும் கிறிஸ்தவ படிப்பினையின் கடந்த காலத்தை சிறப்பாக அணுகவும் எமது வாழ்வு, பணி, பண்புகளை குறித்து கற்று அறியவும் எமக்கு உதவி செய்யும். இப்பாடம் அகஸ்டின், ஜோன் கல்வின், என். டி. ரைட் போன்ற பிரபல்யமான இறையியலாளர்களை அறிந்துகொள்ள உதவும்.

## சுதேசிய கிறிஸ்தவன்

திறமை அளவு: 2

சமய அடிப்படைவாதம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கெதிரான எதிர்ப்புகள் பெருகும் இவ்வேளையில், ஒவ்வொரு கிறிஸ்தவ ஊழியரும் நற்செய்தி பணி முறைகளை திறனாய்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அத்திறனாய்வின் முதற்படியாக வேதாகம அடிப்படை கொள்கைகளை சமரசம் செய்யாமல், மேற்கத்தேய வாழ்க்கை முறையாக எமது கிறிஸ்தவ வாழ்க்கை முறை இல்லாமல், எமது தேசிய மக்கள் வாழ்விடங்களுக்கு ஏற்ற பண்பாட்டு கலாச்சார விழுமியங்கள் சார்ந்ததாக எவ்வாறு கிறிஸ்தவ சாட்சியுடன் கிறிஸ்துவின் அன்பை பகிர முடியும் என்பதை இப்பாடம் சிந்திக்க வைக்கிறது.

## கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

திறமை அளவு: 2

கிறிஸ்தவ உலக நோக்கை விருத்தி செய்தல். “உலக நோக்கு என்பது ஒரு ஜோடி கண்ணாடிகளை போன்றது. அது நாம் பார்ப்பதையல்ல, அதனூடாக பார்ப்பதையே குறிக்கிறது” (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைக்கூடாக எம்முடைய சிந்தனைகளையும் மனப்பான்மையையும் மதிப்பீடு செய்வதன் முக்கியத்துவத்தை இப்பாடமானது ஆராய்கின்றது. உங்கள் தெரிவுகளும் நீங்கள் எடுக்கும் முடிவுகளும் உலகத்திற்கு ஒத்ததாக இருக்காமல் அதிலிருந்து விடுதலை பெறவும், உங்களில் ஆழமான மாற்றம் ஏற்படவும் இது வழிவகுக்கும் என்பது நிச்சயம்.

## சிறிய தீர்க்கதரிசிகள்

திறமை அளவு: 2

தேவனுடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகள் தங்களுடைய வெவ்வேறு நிலைமைகளிலும் தேவனின் மீட்பின் சரித்திரத்திலே தேவ நோக்கங்களுக்காக தேவ செய்தியை தொனிக்க செய்தார்கள். இந்த பாடத்தில், இன்று நாம் இந்த செய்திகளை விளங்கி கொள்வது எப்படி என்றும் தேவ சித்தத்தை செய்கின்றவர்களாகி, கிறிஸ்துவின் சபையை கட்டி, தேவ இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக உலகிற்கு சாட்சிகளாவதை பற்றியும் கற்றுக்கொள்வோம்.

## கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் திருமணம்

திறமை அளவு: 2

கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய தீர்மானங்களில் ஒன்று திருமணம். இப்பாடம் திருமணத்தை குறித்த வேதாகம கண்ணோட்டத்தை புரிந்துகொள்ள உதவும் அதேநேரம் திருமண உறவுக்குள் பாலியல், சிநேகம், வகிபங்கு, பொறுப்புகள் போன்ற விடயங்கள் ஆராயப்படும். அத்துடன் தம்பதிகள் முகம் கொடுக்கும் சவால்களான நிதி நிர்வாகம், பிள்ளைகளற்ற நிலை, துஷ்பிரயோகிக்கும் துணை, நம்பிக்கைத்துரோகம், விவாகரத்து போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

| ஏசாயா | திறமை அளவு: 2 |
|---|---|
| இந்த அற்புதமான தீர்க்கதரிசியின் சரித்திர பின்னணி, எழுத்தாளர், விமர்சனம் செய்யக்கூடிய விடயங்கள், ஏசாயாவின் செய்தியும் இன்றைய தினத்திற்கு அதனை எவ்வாறு பிரயோஜனப்படுத்த முடியும் என்ற விடயங்களை அரவணைக்கின்றதாக இருக்கின்றது. தேவனின் மகத்துவமுள்ள வர்ணனைகள், வரவிருக்கும் மேசியாவை குறித்த எதிர்வு கூறல்கள், அவருடைய இராஜ்யம் முழுமையாக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றை குறித்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். | |

| இலங்கை திருச்சபை வரலாறு | திறமை அளவு: 2 |
|---|---|
| இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் மதிப்பை உணர்ந்து கொள்ள அபூர்வமானதொரு தருணம். இப்பாடநெறியினூடாக இலங்கையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், அமெரிக்க தூதுப்பணியாளர்கள் போன்றோருடைய செயற்பாடுகளை அவதானிப்பதன் ஊடாக தற்போது இலங்கையிலுள்ள சபையின் பல விதமான அமைப்புகள் எவ்வாறு உருவானது என்பதை குறித்தும் அறியக்கூடியதாக இருக்கும். | |

| வழிபாடு பற்றிய இறையியல் | திறமை அளவு: 2 |
|---|---|
| தற்கால சபையானது ஆராதனை மீது அதீத நாட்டமுள்ளதாயிருக்கிறது. தேவனை கனப்படுத்தும் ஆராதனையை குறித்து வேதாகமம் எதனை கற்பிக்கிறது? இப்பாடமானது காயீன் ஆபேலின் ஆராதனையிலிருந்து, பழைய ஏற்பாட்டு பலி ஆராதனை, இஸ்ரவேலின் சங்கீதங்களின் பின்னணியில் புதிய ஏற்பாட்டு ஆராதனையையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்ள உதவும். வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் உங்களது ஸ்தல சபையின் ஆராதனையை மதிப்பீடு செய்ய இப்பாடம் உதவி செய்யும். | |

| கிறிஸ்தவ உக்கிராணத்துவம் | திறமை அளவு: 2 |
|---|---|
| கிறிஸ்தவ உக்கிராணத்துவமானது அனைத்தும் கடவுளுடையது, அனைத்தையும் அவரது மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்து வாழும் ஒரு வாழ்க்கை முறையாகும். இப்பாடமானது எவ்விதம் ஒரு கிறிஸ்தவன் நன்றியுடனும், பொறுப்புடனும் தனது பொருட்களை, மூலவளங்களை, ஆற்றல்களை, தொடர்புகளை கடவுளுக்காக பயன்படுத்தலாம் என்பதை ஆராய்கிறது. | |

| பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி | திறமை அளவு: 2 |
|---|---|
| பழைய ஏற்பாடு புத்தகங்களில் உள்ள பெறுமதியான, அழகான பின்னணியை இப்பாடத்தினூடாக விளங்கிக்கொள்வதோடு, பண்டைய கிழக்கிற்கு அருகாமையின் கலாச்சாரம், மதம், வரலாறு போன்றவற்றை ஆய்வு செய்து, பழைய ஏற்பாட்டை, புதிய வடிவில் கற்றுக்கொள்வதற்கு உதவுகிறது. | |

## சிறுவர் ஊழியம் — திறமை அளவு: 2

சிறுவர்களை எதிர்கால சபையின் அங்கத்தினர்களாக எண்ண வேண்டாம். அவர்கள் இன்றைய சபையின் அங்கத்தினர்கள். சிறுவர்களின் நம்பிக்கையையும் நடைமுறை வாழ்வையும் உதாசீனம் செய்யும் ஒரு உலகில் சிறுவர்கள் தன்னம்பிக்கையுடன் இயேசுவை நம்பி பின்பற்ற வேண்டும். இந்த பாடமானது ஆசிரியர்கள் சவாலுடன் இந்த தேவையை நிறைவேற்ற அவர்களை ஆயத்தப்படுத்தி, எதிர்கால சந்ததி வேதாகமத்தை ஆவலுடன் கற்று, வாழ்வில் மாற்றத்துடன் இயேசுவை பின்பற்ற உதவி செய்யும்.

## கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும் — திறமை அளவு: 2

திருச்சபை வரலாறில் பல இறையியலாளர்கள் கிறிஸ்துவின் தெய்வீக, மனுஷீகம் தொடர்பான கேள்விகளுக்கான பதிலை பல நூற்றாண்டுகளாக முழுமையாக விபரிக்க முயற்சித்துள்ளனர். கிறிஸ்துவை குறித்தும், அவரது பண்புகள், குணாதிசயங்கள், தேவனோடு அவருக்குள்ள தெய்வீக உறவு, பழைய, புதிய ஏற்பாட்டில் அவரது செயற்பாடுகள், இன்றைய திருச்சபைகளில், கிறிஸ்தவர்களது வாழ்வில் அவர் செயற்படுகிறார் போன்றவற்றிற்கான விளக்கங்களை இப்பாடத்தில் ஆராயப்படும்.

## தேவனும் சமூகமும் — திறமை அளவு: 2

இப்பாடநெறிக்கூடாக சமூகத்தின் நவீன போக்குகளை குறித்து வேதாகமம் போதிப்பது யாது? என்பதையும் தற்போதைய காலத்தில் முக்கிய போக்குகளாக காணப்படும் பன்மைவாதம், பன்முக கலாச்சாரவாதம், உலகமயமாக்கல், பெண்கள் விடுதலை போன்ற விடயங்களையும் வேதாகம கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். அன்றாட வாழ்வில் உலகத்தினருடன் தொடர்புறும் கிறிஸ்தவனுக்கு மிகவும் அத்தியாவசியமான பாடமாகும்.

## ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல் — திறமை அளவு: 2

வரையறையில்லாத ஊழல், அநீதி, வன்முறைகள் என பல விடயங்களிற்கு எம்முடைய சமுதாயம் முகம் கொடுக்கின்றது. இந்நிலையில் தேவனுக்கு கனத்தை கொடுக்கத்தக்கதாக, சமுதாயத்தை மாற்றும் விதமாக எவ்வாறு மாறுத்தரத்தினை அளிப்பது? ஆமோஸின் வார்த்தைகள் இவ்விதமான சமகால பிரச்சனைகளிற்கு அற்புதமான விதத்தில் பொருத்தமானதாக அமைகிறது. இப்பாடமானது நீங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடிய வட்டாரத்திற்குள் ஞானமாக சிந்திப்பதற்கும், இருப்பதற்கும், செயற்படுவதற்கும் வழிகாட்டியாக அமைகிறது.

## எபேசியருக்கு எழுதிய நிருபம் திறமை அளவு: 2

“நிருபங்களின் இராணி”, “பவுலின் எழுத்துக்களின் மகுடம்” என வர்ணிக்கப்படும் இந்நிருபம் சீர்திருத்தவாதிகளின் அபிமானத்திற்குரியது. பழையவைகளை ஒழித்து எல்லாவற்றையும் புதுப்பிக்கும் சுவிசேஷத்தின் வல்லமையையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் இந்நிருபம் இரட்சிப்பு, திருச்சபை, கிறிஸ்தவ வாழ்க்கை தொடர்பான உங்கள் கண்ணோட்டத்தை மாற்றக்கூடியதுடன் வாஞ்சையோடு கற்றுக்கொள்ளும் எந்த கிறிஸ்தவனையும் சபையையும் உயிர்ப்பூட்டவல்லது!

## புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம் திறமை அளவு: 2

புதிய ஏற்பாட்டு நூல்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை கற்றுக்கொள்வதோடு ஒவ்வொரு புத்தகத்தினதும் எழுத்தாளர், முக்கிய செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள், சரித்திர பின்னணி மற்றும் தனித்துவங்களை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள இப்பாடமானது துணை புரியும்.

## துர்உபதேசங்கள் திறமை அளவு: 2

வேதாகம அடிப்படை சத்தியங்களை புரட்டுகின்ற தவறான உபதேசக்குழுக்களினால் அநேக கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்பட்டு தவறான போதனைகளுக்குள் வழிநடாத்தப்படுகின்றார்கள். இவ்வகை குழுக்களின் போதனைகளையும் அவர்கள் பயன்படுத்தும் அணுகுமுறைகளையும் அறிந்துகொண்டு அதன் மூலம் கிறிஸ்தவ விசுவாசிகளை பாதுகாக்கவும் வழிநடத்துவதற்குமான அறிவை இப்பாடத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

## நியாயாதிபதிகள் திறமை அளவு: 2

நியாயாதிபதிகளின் புத்தகமானது போராட்டம் நிறைந்த இஸ்ரவேலின் வரலாற்று பின்னணியை சார்ந்ததாகும். “ஒவ்வொருவரும் தங்களின் பார்வைக்கு சரியானதை செய்தார்கள்”. வன்முறைகள், தந்திரங்கள் ஏமாற்றம் மற்றும் சாகசம் நிறைந்த இப்புத்தகத்தில் சிம்சோன் மற்றும் தெலீலாள், இடது கை பழக்கமுள்ள ஏகூத், நழுவும் வீரன் கிதியோன், மேலும் வீரச்செயல்களை செய்த அநேகரை குறித்து நாம் அறியலாம். தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கு நமக்குள்ள சவால்களையும், நமது பெலவீனங்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்பதையும் இப்பாடத்தில் அறிந்துகொள்ளலாம்.

## திருச்சபை மாதிரிகள் — திறமை அளவு: 3

இன்றைய திருச்சபைகளை மாதிரிகளை பற்றிய இப்பாடத்தில் சபையின் சரித்திர, இறையியல் கண்ணோட்டத்தை ஆழமாகவும் விரிவாகவும் கற்றுக்கொள்ளலாம். அத்துடன் இது திவ்விய சாக்கிரமந்துகள் (திருவருட்சாதனங்கள்), கூட்டு வழிபாடு, சபையின் ஆளுகை முறை பற்றி மதிப்பீடு செய்து கற்றுக்கொள்ளுவதற்கான அரிய வாய்ப்பாகும்.

## பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல் — திறமை அளவு: 3

கிறிஸ்தவ வரலாறின் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற பல இறையியல்கள் கிறிஸ்தவ சமூகத்தை வரையறுத்தும், சிலசமயங்களில் பிரிவினையை ஏற்படுத்தியுமுள்ளன. இப்பாடமானது பல்வேறுபட்ட இறையியல் கொள்கைகளின் தோற்றம், பின்னணி, வளர்ச்சி, அதன் இறையியலாளர்கள், வேதாகம அடிப்படை, சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், இன்றைய திருச்சபையில் அவை ஏற்படுத்தியுள்ள பலம், பலவீனம் போன்றவற்றை ஆராய்கிறது.

## திருப்பணிக்கான அறநெறி — திறமை அளவு: 3

பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான பிரச்சனைகள் ஆண்டாண்டு காலமாக கிறிஸ்தவ சமுதாயங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக காணப்பட்டது. இன்றும் அவை திருச்சபையை பலமாக தாக்குகின்றது. இப்பாடமானது பணம், பாலியல், அதிகாரம் தொடர்பான ஆபத்துக்களை குறித்த விழிப்புணர்ச்சியை அதிகரிக்கும். அத்துடன் எவ்வாறு இக்கொடைகளை துஷ்பிரயோகம் செய்யாதபடி கிறிஸ்தவ ஊழியத்தை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய பொறிமுறைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும், பேணவும் முடியும் என்பதை கற்றுக்கொள்ளவும் துணை புரியும்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரும், பட்டதாரியுமான இவர், கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவராவார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் தேசிய கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியத்தின் பொதுச்செயலாளராகவும் கடமையாற்றுகிறார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh (candidate)
**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான,** இவர், தெற்காசிய இறையியல் கல்லூரியில் (SAIT, இலங்கை), இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS, தென் கொரியா) ஆகியவற்றின் பட்டதாரியுமாவார். தற்போது தென்னாபிரிக்க இறையியல் கல்லூரியில் (தென்னாபிரிக்கா) தனது MTh. இவர், கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும், கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளராகவும் திகழ்கின்றார். சிலாபம், புனித யாக்கோபின் (St. James) திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD, MA (candidate)
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும், பகுதி நேர கல்விப்பீட உறுப்பினருமான இவர் தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley College-ல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin
**கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவாக்கல் நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**வனஜா ராஜ்குமார்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், வடகொழும்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வரும் இவர் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினருமாவார். பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். சத்திய வசனம் நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு நிர்வாக ஒருங்கிணைப்பாளராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.




**யொஹான் கிருஷ்ணகுமார்,** BTh, MTh
நோர்ட்டன் பிரிட்ஜ் SAIT கலாசாலையில் இளமாணி பட்டத்தையும் வேல்ஸ்ஸின் Bangor பல்கலைக்கழகத்தில் நடைமுறை இறையியலில் முதுமாணி பட்டத்தையும் Global Institute of Theology (WCRC)-ல் சீர்திருத்த இறையியல் பட்டத்தையும் பெற்ற இவர் கண்டி City Mission நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளராகவும், உள்ளூர் மற்றும் வெளியூர் வேதாகம கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், தனது உள்ளூர் திருச்சபையில் இளைஞர் ஊழிய பணியாளராகவும் மூப்பராகவும் சேவையாற்றுகின்றார். கண்டி, பிரஸ்படேரியன் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church-ல் துணை போதகராகவும், தனது ஆராதிக்கும் சபையாகவும் கொண்டுள்ளதுடன், தற்போது Infinity Centre for Higher Studies(இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். அத்துடன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார். அத்துடன் கொழும்பு இரட்சண்ய சேனையில் பகுதி நேர விரிவுரையாளராக கடமையாற்றுவதுடன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் முதுமாணி பட்டப்படிப்பையும் தொடர்கிறார்.



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் பட்டச்சான்றிதழை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA
Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ கற்கைநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**யோகநாதன் பகீரதன்,** BA (Hons), MA
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் ஐக்கியத்துடன் (FOCUS) இணைந்து பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் பணியாற்றி வருகிறார். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சீயோன் திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**தனராஜ் அஜேந்திரன்,** BTh, MA
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், கடந்த 13 வருடங்களாக வெள்ளவத்தை கிளையில் ஆரம்ப பணியில் ஈடுபட்டவருமாவார். தற்போது மலையகத்தில் ஹட்டன் பகுதியில் அருட்பணி ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார். திருச்சபை ஸ்தாபித்தல், சீஷத்துவம், வாலிபருக்கான பயிற்சி மற்றும் இறையியல் கல்லூரிகளில் கற்பித்தல் பணிகளில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.



**ஜேசன் செல்வராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் முன்னாள் கல்விப்பீட உறுப்பினரான இவர், AOG கைதடி சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகராகவும் சேவையாற்றுகிறார். அத்துடன் “Simply mobilizing SL” இன் தேசிய இணைப்புக்குழுவின் அங்கத்தவராகவும், சிவில் உரிமை அமைப்பாகிய யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அங்கத்தவருமாவார்.



**நெப்போலியன் பத்மநாதன்,** BTh, MTh, PhD
கொழும்பு இறையியல் கல்லூரியின் இணைக்கல்வியின் முன்னாள் முகாமையாளராகவும் கல்விப்பீட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர் இக்கல்லூரியின் பட்டதாரியுமாவார். ஐக்கிய இராஜ்ஜிய வேல்ஸ் தேசத்து Glamorgan பல்கலைக்கழக முதுமாணி பட்டத்தை பெற்ற இவர், தற்போது கற்பித்தல் மற்றும் பிரசங்க பணியில் ஈடுபட்டு வருகிறார். காலிமுகம், கிறிஸ்துநாதர் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**ப. காந்தன்,** BTh, MSW
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியான இவர், தேசிய சமூக நிறுவனத்தில் உளவளத்துணை பட்டச்சான்றிதழினையும் நிறைவு செய்து, தற்போது சமூகப்பணிக்கான முதுமாணியினை தொடர்கின்றார். 20 வருடங்களாக கிறிஸ்துவுக்காக இளைஞர் அமைப்பில் பணியாளராகவும் தேவனின் பணியை தொடர்கின்றார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**ம. தர்ஷன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், யாழ் கல்வி நிலையத்தின் நிர்வாக இணைப்பாளராக பணியாற்றி வருகிறார். சரசாலை, தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ள இவர், அதன் போதகராக சேவையாற்றுவதுடன், வாலிபர்கள் மத்தியில் தேவ பணியை மேற்கொண்டும் வருகிறார்.



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரி. ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவர். அநேக வருடங்களாக கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிந்துள்ளார். தற்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவி போதகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.



**சிவராஜசிங்கம் ஜெயராஜ்,** BTh

கொழும்பு இறையில் கல்லூரியின் பட்டதாரியான இவர் கிறிஸ்துவுக்காக இளைஞர் பணியில் 26 வருட பணி அனுபவத்தோடு பல புதிய பிரதேசங்களில் ஊழியங்களை ஆரம்பிக்க தேவனால் தற்போது வரை பயன்படுத்தபடுகின்ற பாத்திரம் ஆவார். தற்போது இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கிய ஊழியத்தின் தேசிய இயக்குனராக பணியாற்றுகிறார். இவர் மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**சூசைப்பிள்ளை பிரின்ஸ் டைனீசியஸ்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், 37 வருடங்களாக "கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கத்தில்" சேவையாற்றி தற்போது முல்லைத்தீவு பகுதியில், இணை இயக்குனராக பணியாற்றி வருகிறார். இவர் யாழ் மெதடிஸ்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**பா. சுதாஸ்,** BTh

யாழ் இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஸ்தாபனத்தில் 15 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியவராவார். தற்போது H.C.F அமைப்பின் வட பிராந்திய பொறுப்பாளராக பணியாற்றுகிறார். இவர் யாழ்ப்பாணம், AOG திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்




**மோகன் இதயகுமார் அழகக்கோன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஸ்தாபனத்தில் பயிற்சி நிர்வாக இயக்குனராகவும், சப்பிரகமுவா, களுத்துறை பிரிவுகளுக்கு ஊழிய பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் ஊழியம் செய்வதுடன் இளம் தலைவர்களுக்கு பயிற்சி கொடுப்பவராகவும் பணியாற்றுகிறார். இவர் வெள்ளவத்தை, மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**சரத் டீ சில்வா,** BTh, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டத்தையும், பிலிப்பைன்ஸின் தலைமைத்துவத்திற்கான சர்வதேச பட்டதாரி கல்லூரியில் (IGSL) இறையியல்சார் முதுமாணி பட்டத்தையும் (MDiv) பெற்றுள்ளார். 30 வருடங்களுக்கும் மேலாக பல்தரப்பட்ட சேவைத்துறைகளில் ஊழிய அனுபவம் மிக்கவரும், தற்போது ஊவா, கிழக்கு மற்றும் மேற்கு பிரதேசங்களில் முன்னோடி ஊழியர்களுக்கு ஊழிய வழிநடத்துனராகவும் உள்ளார். மேலும், இடர்பாடுகளை சந்திக்கும் திருச்சபைகளுக்கு ஊழியம் செய்கிற நிவ் ஹார்வர்ஸ்ட் பவுண்டேஷன் நிறுவனத்தின் தேசிய இயக்குனராகவும் பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் ஜீவனுள்ள கிறிஸ்துவின் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**சந்ரசேகரம் றொஷான் க்ளவன்ஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், இறக்குவானை கிறிஸ்தவ எழுப்புதல் திருச்சபையின் தலைமை போதகர் ஆவார். அத்துடன் திருச்சபைகளை நிறுவும் ஊழியத்திலும், சீஷர்களை உருவாக்குவதிலும் மற்றும் அருட்பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். மேலும் சப்ரஹமுவ போதகர் ஒன்றியத்தின் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.



**பாலசிங்கம் றொபேட்,** MA
AOG வேதாகம கல்லூரி விரிவாக்க மையம் யாழ் கிளையின் இணைப்பாளரும் AGBC இறையியல் கல்லூரியில் Biblical Counseling முதுமாணி பட்டதாரியும் AOG கோப்பாய் திருச்சபையின் ஸ்தாபகரும் தலைமை போதகரும் ஆவார்.

# CTS பாடத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு பாடத்திட்டத்திற்குள் உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களானது மூன்று மட்டங்களில் பாடத்திட்டத்தினை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கைப்பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21ஆம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புகள்: தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*

**இறையியல் பட்டச்சான்றிதழ் (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புகள்: தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 72*

**இறையியல் இளமாணிப்பட்டம் (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறி யாழ்ப்பாண மாகாண கல்வி நிலையத்தில் மாத்திரமே நடைபெறும்.
வகுப்புகள்: தமிழ்மொழியில் நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம் 011-2890809; extensions@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாடநெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமையும் நண்பகல் 1.00 முதல் மாலை 4.00 வரை
  - ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9.30 முதல் நண்பகல் 12.30 வரை
- ஒவ்வொரு திறமை அளவு / புள்ளிகளானது 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

| | பாடங்கள் | திறமை அளவு (புள்ளிகள்) |
|---|---|---|
| கட்டாய பாடங்கள் | | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 04 | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 04 | 08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

**இயங்கலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**
சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**
பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**
துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

189 துடுகமுனு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | registrar@cts.lk | www.cts.lk